முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண்.33/2025 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | S.தேவேந்திரன் | வட்டம் | : | ஈரோடு |
| த/பெ | : | சீனிவாசன் | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ | : | | தொழில் | : | மேலாளர் |
| கிராமம் | : | ஈரோடு | வயது | : | 49 |

**வா.சா.1: முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் மேலாளர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

10.03.2016-ம் தேதியிட்ட வாகனக் கடன் விண்ணப்பம் (அசல்) **வா.சா.ஆ.1** ஆகவும், 10.03.2016-ம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதம் (அசல்) **வா.சா.ஆ.2** ஆகவும், 10.03.2016-ம் தேதியிட்ட ஏற்பாட்டு கடிதம் (அசல்) **வா.சா.ஆ.3** ஆகவும், 10.03.2016-ம் தேதியிட்ட கொதுவை ஒப்பந்தம் (அசல்) **வா.சா.ஆ.4** ஆகவும், 31.07.2024-ம் தேதியிட்ட கடன் எண்.35627952096-ன் கணக்கு விவர உரை (அசல்) **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.